Koviloor Digital Library

உ
திருவருள் துணை

5-6 2474

அற்புதச் செயல்கள்!

செந்தமிழால் சைவசமயாச்சாரியர்கள்
தமிழ் நாட்டில் செய்தருளிய அற்புதங்களும்,
அவற்றிற்கும் இயேசு நாதர் செய்தருளிய
அற்புதங்களுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகளும்

Acc. No. 5459
155

திருவருள் தவநெறி
மன்ற வெளியீடு

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ
திருவருள் துணை.

அற்புதச் செயல்கள்!

செந்தமிழால் சைவ சமயாச்சாரியர்கள்
தமிழ் நாட்டில் செய்தருளிய அற்புதங்களும்,
அவற்றிற்கும் இயேசு நாதர் செய்தருளிய
அற்புதங்களும் உள்ள ஏற்றத்தாழ்வுகளும்.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: N-436846)

ஆசிரியர்:
மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம்.
291-வது குரு மகா சந்நிதானம்
திருவருள் தவயோக
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்.

கோவிலூர் ஆதீனம்
5459
R65
கோவிலூர்-630 307

நிரந்தரத் தலைவர்:-
திருவருள் தவநெறி மன்றம்,
70, தெற்காவணிமூல வீதி, மதுரை.

சௌம்ய-ஸு வைகாசி

ஜூன் மாதம்
1969

0-25

Koviloor Digital Library

Koviloor Digital Library

மதுரை, திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

291–ஆவது குரு மகா சந்நிதானம்

திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

உயிர்களும் கடவுளும்.

உயிர்கள் எண்ணில்லாதன, என்றும் உள்ளன. உயிர்களுக்கு உருவம் கிடையாது.

உருவம் இல்லாத உயிர்கள், உருவமுள்ள உடல்களைச் செயற்கையால் இயக்கும் சக்தியுடையன.

உயிர்கள் இயற்கை அறிவுடையன அல்ல.

உயிர்கள் பிறர் அறிவிக்க அறியும் செயற்கை அறிவு உடையன.

உயிர்கள் இல்லாத உடல்கள் வளர்வதில்லை. தொழிற்படுவதில்லை. உடல்கள் இல்லாத உயிர்களும் தொழிற்படுவதில்லை.

உயிர்கள் இல்லாத உடல்கள் அறிவற்ற நாற்றமுடைய கட்டைகளே.

உடல்களுக்குத் தனியே வளர்ச்சியும், தொழிற்பாடும் கிடையா.

உருவமில்லாத உயிர்கள், உருவமுள்ள உடல்களில் தங்கியிருக்கின்றன.

உயிர்கள் விரும்பியபடி உடல்களில் தங்கியிருக்க முடியவில்லை; உடல்களை உண்டாக்கவும் முடியவில்லை.

பெற்றோரும் உடல்களுக்கு உயிரைக் கொடுக்கவும், பிரிக்கவும் முடியவில்லை; அவர்கள் விரும்பியபடி உடல்களை உண்டாக்கவும் முடியவில்லை.

ஆனதால், உடல்களை உண்டாக்கவும், உடல்களில் உயிர்களைப் புகுக்கவும் பிரிக்கவும் செய்கிற ஒருவர் உண்டு என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அப்படிச் செய்பவரையே கடவுள் என்று சொல்லுகிறோம், கடவுள் உயிர்களைப் படைக்கவில்லை. கடவுள் உடல்களையே படைக்கின்றார்.

Koviloor Digital Library

உயிர்களைக் கருணையுள்ள கடவுள் படைத்திருந்தால், அவர் எல்லோரையும் ஒரே தன்மையாகப் படைத்திருக்க வேண்டும்.

உயிர்களின் தன்மைகள் பலதரப்பட்டிருப்பதை அவற்றின் தொழிற்பாட்டிலிருந்து உணர்கிறோம்.

கடவுள் உயிர்களின் தன்மைக்குத் தகுந்த உடல்களைக் கொடுக்கின்றார்.

நாம் வாழ்வதற்கு இன்றியமையாத உடல்களையும், உலகத்தையும், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள், மழை, நெருப்பு, காற்று, ஆகாயம் முதலியவற்றையும் மனிதர்கள் உண்டாக்கவில்லை.

அவைகளும் ஒரு முறைப்படி தொழிற்படக் காண்கின்றோம்.

அவற்றை அந்த முறையில் இயக்குவதும் கடவுள்தான். கடவுளுக்கு அளவிறந்த ஆற்றலும் அறிவும் இருக்கின்றதை அவற்றிலிருந்து உணரலாகும்.

நமக்கு உடல்களைக் கொடுத்து, நமக்காக உலகத்தையும் படைத்து, நம்முடைய அறிவையும் வளர்த்து வருகின்ற கடவுளுக்கு நாம் நன்றிகூற, அவரைப் பூசித்துப் புகழ்ந்துபாட வேண்டியது அவசியமாகின்றது. அவருடைய உயர்வையும், நம்முடைய தாழ்வையும் உணர்ந்து, அவருடைய திருவருளைப் பெற்று நாம் உய்யவேண்டிய நெறியை இவ்வுடல் உள்ளபோதே, இன்றே தொடங்கவேண்டும்.

சி. வி. என். பிரஸ், மதுரை:–69. தொலைபேசி: 7152.

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
PHONE -436846

உ
சிவமயம்.
திருவருள் துணை.

செந்தமிழ்ப் பாடல்களால் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள்

செய்த அற்புதச் செயல்கள்

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்த னூர்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையின் ஆண்பனை பெண்பனை யாகுமே
பழைய என்புபொற் பாவைய(து) ஆகுமே
சினஅ ராவிடந் தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

1. சீர்காழித் திருத்தலத்தில் தமது மூன்றுவது வய தில் சிவபெருமான் கட்டளைப்படி உமா தேவியார் தந்த ஞானப் பாலை உண்டு, சிவஞானம் பெற்று திருஞான சம்பந்தராகி, தேவாரப் பதிகம் பாடி யருளினுர்.

2. திருக்கோலக்கா என்னுந் திருத்தலத்தில் சிவபெரு மான் வழங்கிய திருவைந்தெழுத்துப் பொறிக்கப் பெற்ற தங்கத்திலாகிய தாளங்களை, ஓசை உடையனவாகப் பெற்றுர்.

3. திருநெல்வாயில் அரத்துறை என்னுந் திருத்தலத் தில் சிவபெருமான் இவருக்கு முத்துச் சிவிகையும் முத்துக் குடையும் முத்துச் சின்னங்களும் கொடுத் தருளினுர்.

Koviloor Digital Library

4. திருப்பாச்சிலாச்சிரமம் என்னுந் திருத்தலத்தில் வாழ்ந்திருந்த "கொல்லிமழவன்" என்பவனது புதல்வி "முயலகன்" என்னும் தீராத நோயால் துன்புற, இறைவனை நோக்கிப் பதிகம்பாடி அந் நோயை நீக்கியருளினர்.

5. திருச்செங்கோடு என்னுந் திருத்தலத்தில் உடன் வந்த சிவனடியார்களுக்கு உண்டாகிய குளிர் சுரத்தைப் பதிகம்பாடி நீக்கி அருளினர்.

6. திருப்பட்டீச்சுரம் என்னுந் திருத்தலத்தில் வேனிற் காலத்து வெயில் வெப்பத்தைத் தணிப்பதற்கு இறைவன் வழங்கிய முத்துப் பந்தரைப்பெற்றார்.

7. திருவாடுதுறை என்னுந் திருத்தலத்தில் தந்தை யாரகிய சிவபாதவிருதயர் விருப்பப்படி அவர் செய்ய எண்ணிய வேள்விக்காகப் பதிகம்பாடி, சிவ பெருமானிடமிருந்து ஆயிரம் பசும்பொற் காசுகள் அடங்கிய பொன் முடிப்பைப்பெற்று வழங்கி யருளினர்.

8. திருமருகல் என்னுந் திருத்தலத்தில் பாம்பு தீண்டி இறந்த வணிகன் ஒருவனைப் பதிகம்பாடி உயிர் பெற்றெழச் செய்தருளினர்.

9. திருவீழிமிழலை என்னுந் திருத்தலத்தில் சிவனடி யார்களுக்குத் திருஅமுது ஊட்டுவதற்காகச் சிவ பெருமானது திருவருளால் நாள்தோறும் கிடைத்த படிக்காசுக்களைக் கொண்டு பஞ்சம் தீரும்வரை பலரது பசியை நீக்கியருளினர்.

10. திருமறைக்காடு என்னும் வேதாரணியத் திருக் கோயிலின் நேர்முகக்கதவு வேதங்களால் பூட்டப்

Koviloor Digital Library

பெற்று நெடுங்காலமாகத் திறக்கப்படாமல் இருந்ததை திருநாவுக்கரசு சுவாமிகள் பதிகம் பாடித்திறப்பிக்க, இவர் பதிகம்பாடி மீண்டும் பூட்டவும் திறக்கவும் அருளினர்.

11. மதுரைத் திருப்பதியில் அடியார்களோடு தங்கியிருந்த திரு மடத்தில் சமணர்கள் வைத்த தீ பற்ருதிருக்கவும், அத்தீயின் வெப்பம் பாண்டிய மன்னனைச் சாரவும், பதிகம்பாடி அருளினர்.

12. பாண்டிய மன்னனது வெப்புநோய் சமணர்களால் தீர்க்க முடியாமலிருக்க அது அவனைவிட்டு நீங்கும்படி, பதிகம்பாடி, திருநீறு பூசி அருளினர்.

13. சமணர்களோடு புரிந்தவாதத்தில், அவர்களது மந்திரம் எழுதப் பெற்று நெருப்பிலிடப்பட்ட அவர்களது ஏடு எரிந்து சாம்பலாகவும், தெவாரப் பதிகம் எழுதிய தமது ஏடு நெருப்பில் வேகாமல் பச்சையாக விளங்கவும் அருளினர்.

14. வைகையாற்று வெள்ளத்தில் இட்ட சமணர்களின் மந்திரம் பொறித்த ஏடு ஆற்று வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லவும், தேவாரப்பதிகம் பொறித்த தமது ஏடு அதில் எதிரேறிச் செல்லவும் அருளினர்.

15. திருக்கொள்ளம்பூதூர் என்னுந் திருத்தலத்தில் முள்ளிநதி வெள்ளத்தில் திருப்பதிகம் பாடி அதன் வல்லமையினுலேயே வேறு கோலொன்றுமின்றி ஓடத்தை மறுகரை சேரும்படி அருளினர்.

16. போதி மங்கையிலிருந்த 'புத்தநந்தி' என்பவனது துடுக்கை அடக்குவதற்காக அவனது தலையில் இடிவிழும்படி தமது அடியவர் ஒருவர் மூலம் செய்தருளினர்.

Koviloor Digital Library

17. திருவோத்தூர் என்னுந் திருத்தலத்தில் ஆண் பனைகள் பலவற்றைப் பதிகம்பாடிப் பெண்பனைக களாக்கி அருளினூர்.

18. திருமயிலாப்பூர் என்னுந் திருந்தலத்தில் சிவநேசர் என்பவரது மகளாகிய பூர்பாவை என்னும் பெண் மணி, மலர் கொய்யும்போது பாம்பு தீண்டி இறக்க அவளது பூதஉடம்பைச் சுட்டு எலும்பையும், சாம் பலையும் ஒரு குடத்திற் சேமித்து வைத்திருந்தார் கள். அக்குடத்தை கபாலீச்சரத்திற்குக் கொண்டு வரச் செப்து, பதிகம்பாடி, பல ஆண்டுகளுக்குமுன் இறந்துபோன பூம்பாவையை அதுவரையுள்ள ஆண்டு வளர்ச்சியுடன், குடத்திலிருந்து வெளி வரும்படி பதிகம்பாடிச் செய்தருளினூர்.

19. திருநல்லூர்ப் பெருமணம் என்னும் திருத்தலத்தில் இவ்வுலக வாழ்க்கையிலிருந்து தன்னை அழைத்துக் கொள்ள வேண்டுமென்று, சிவபெருமானிடம் வேண்டி உடனிருந்த அனைவரையும், கூட்டிக் கொண்டு அங்கு தோன்றிய ஜோதியில் கலந்து பேரின்பப் பேறு பெற்றூர்.

அருந்தமிழ்ப் பாடல்களால்
அப்பர் சுவாமிகள் செய்த அற்புதச் செயல்கள்.

தலைகொள் நஞ்சமு தாக விளையுமே
தழலின் நீறு தடாகம தாகுமே
கொலைசெய் யானை குனிந்து பணியுமே
கூர்அ ராவிடந் தீரெனத் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னுளே
கதவு மீண்டு கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியில் கல்லும் மிதக்குமே
அப்பர் போற்றும் அருந்தமிழ்ப் பாடலே.

Koviloor Digital Library

5459
R65

1. தமக்குவந்த கொடிய சூலை நோயைத் திருவதிகை வீரட்டானத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது பதிகம்பாடித் தீர்த்துக்கொண்டார்.

2. சமணர்கள் இட்ட நீற்றறையில் ஏழுநாட்கள் இருந்து எந்தவிதமான ஊறுபாடுமின்றி, சிவபெருமான் திருவருளால் வெளிவந்தார்

3. சமணர்கள் ஊட்டிய நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்டும் இறைவனருளால் உயிடனிருந்தார்.

4. சமணர்களால் தன்னைக் கொல்லும்படி ஏவி விடப்பட்ட யானையைத் தன்னை வலம்வந்து பனியும்படி செய்தார்;

5. சமணர்கள் தன்னைக் கல்லிற்கட்டிக் கடலிற்போட, அக்கல்லையே தெப்பமாகக் கொண்டு மிதந்து கரை சேர்ந்தார்,

6. திங்களூர், அப்பூதி அடிகள் நாயனரின் மூத்த மகன் பாம்புதீண்டி இறக்க, பதிகம்பாடி அவனை உயிர்ப்பித்தருளினர்.

7. சிவனடியார்களுக்கு அமுது ஊட்டுவதற்காகத் திருவீழிமிழலையில் சிவபெருமான் நாள்தோறும் அருளிய பொற்காசுகளைப் பெற்று பஞ்சம் தீரும் வரைப் பலரது பசியைத் தீர்த்தருளினர்.

8. திருமறைக்காட்டில் வேதங்களால் பூட்டப்பெற்ற திருக்கோயிற் கதவைப் பதிகம்பாடித் திறந்தருளினர்.

9. திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் மார்க்கத்தில் இவர் பசியால் வருந்துவதைச் சிவபெருமான் அறிந்து தாம் ஒரு பிராமணவேடம் பூண்டுவந்து இவருக்குத்

Koviloor Digital Library

கட்டமுது கொடுத்து இவரது பசியைத் தணித்து ஒரு குளத்தையும், சோலையையும் உண்டுபண்ணி இவரை அக்குளத்தில் நீர் அருந்தும்படியாகவும் அச்சோலையில் இளைப்பாறும்படியாகவும் செய்தருளினர்.

10. இவர் கயிலாய தரிசனம் செய்யும் அபிப்பிராயத்தோடு காசியைக் கடந்து வெகுதூரத்தில் சென்றுகொண்டிருக்கும்போது சிவபெருமான் ஒரு பிராமண வேடத்தோடு இவர் எதிர் சென்று இவர் கருத்தை வினவ, இவர் அதைத் தெரிவிக்க அவர் இவருக்கு ஒரு குளத்தைக் காட்டி அதில் இவரை மூழ்கச் சொல்ல, இவர் அவ்வாறே மூழ்கி நீரினின்றும் எழுந்திருக்கும்போது திருவையாற்றுத் திருக்குளக் கரையில் வெளிப்பட்டுக் கயிலாய தரிசனம் செய்தார். பின்பு கயிலாயத் தோற்றம் மாறி ஆலயமாய் இருக்கக் கண்டார்.

11. திருப்புகலூரில் இவர் உழவாரப்பணி செய்துகொண்டிருக்கும் நாளில் இவர் செதுக்குமிடமெல்லாம் பொன்னும், நவரத்தினங்களும், சிவபெருமான் அருளால் உண்டாக, அவைகளை மண்ணாகவும், கல்லாகவும் மதித்து பொய்கையில் எறிந்துவிட்டார். பின்னும் சிவபெருமான் இவரை மயக்கும்படி ன்திரீகளை அனுப்ப இவரை மயக்க முடியாமல் அவர்கள் வெட்கிப் போயினர்.

12. திருப்புகலூரில் இறைவனது திருவடியை அடைய விரும்பி "புண்ணியா உன்னடிக்கே போதுகிறேன்" என்று பாடிச் சிவபெருமானோடு இரண்டறக் கலந்தார்.

Koviloor Digital Library

சொற்றமிழ்ப் பாடல்களால்
சுந்தரமூர்த்தி சுவாமிகள் செய்த அற்புதச் செயல்கள்

வெம்க ராவுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை வாரண மீதில் இருத்துமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே
மருவி ஆறு வழிவிட்டு நிற்குமே
செங்கல் ஆனது தங்கம தாகுமே
திகழும் ஆற்றிட்ட செம்பொன் அளிக்குமே
தங்க வான்பரி சேரற்கு நல்குமே
துலங்கு சுந்தரர் சொற்றமிழ்ப் பாடலே.

1. குண்டையூர்க் கிழவர் தந்த நெற்குவியல்களைச் சிவபெருமான் திருவருளால் பூதங்களைக் கொண்டு திருவாரூருக்கு எடுப்பித்துக் கொண்டார்.

2. திருப்புகலூர்த் திருக்கோயில் முற்றத்தில் தலைக் குயரமாக வைத்துப் படுத்திருந்த சுட்ட செங்கற்கள் எல்லாம் தங்கக் கட்டிகளாக இறைவனது திருவருளினால் பெற்றார்.

3. திருப்பாச்சிலாச்சிரமாத்திலும், திருவோணகாந்தன் றளியிலும் இவர் பொன் வேண்டி பரமசிவத்தின் மேல் பதிகம் ஓதி பொற்குவை பெற்றனர்.

4. திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்தில் சிவபெருமான் திருவருளாற்பெற்ற பொன் முழுவதையும், அங்குள்ள மணிமுத்தாற்றிற் போட்டுவிட்டுத் திருவாரூரிலுள்ள கமலாலயத் திருக்குளத்தில் முழ்கிக் குறைவின்றி எடுத்துக் கொண்டார்.

Koviloor Digital Library

5. திருக்குருகாவூருக்கு அருகில் சிவபெருமான் அந்தணக் கோலத்துடன் வந்து கொடுத்த பொதிச் சோற்றைப் பெற்று உண்டார்.

6. திருவையாற்றைத் தெரிசிக்கச் செல்லும் பொழுது காவிரியாற்று நீர் பெருகித் தடை செய்யப் பதிகம் பாடி நீரோட்டத்தைத் தடை செய்து நிறுத்தி ஆற்றைக் கடந்து சென்ருர்.

7. திருப்புக்கொளியூர் அவிநாசியில் ஐந்தாண்டுப் பருவத்தில் முதலேயால் உண்ணப் பெற்று மாண்ட அந்தணச் சிறுவனே இரண்டாண்டுகள் சென்ற பிறகு ஏழாண்டுச் சிறுவனுக அதே முதலே வாயிலிருந்து வரும்படி அழைத்துக் கொடுத்தருளினுர்.

8. திருவஞ்சைக் களத்தில் சிவபெருமானே வேண்டிக் கயிலாயத்திலிருந்து வந்த வெள்ளே யானேயின் மீது ஏறித் தேவரும் மூவரும் எதிர்கொண்டழைக்கத் திருக்கயிலாயத்தை அடைந்து பதிகம்பாடி, அப் பதிகம் நிலவுலகிற்கு வந்து வழங்கும்படி செய் தருளினுர்.

9. இவர் திருமணத்தில் செய்து கொண்ட சபதத்தைத் தவறிச் சங்கிலியாரைப் பிரிந்து திருவாருருக்குப் போக உத்தேசித்துத் திருவொற்றியூர் எல்லேயைத் தாண்டியவுடன் இரண்டு கண்களும் தெரியாமல் குருடாயினர். பின்பு சிலர் கையைப் பற்றிக் கொண்டு வெண்பாக்கம் சென்று சிவனேத்துதிக்க இவருக்கு அத்தலத்தில் பரமசிவன் ஊன்றுகோல் அளித்தனர். அதைக் கொண்டு கச்சி ஏகம்பம் சென்று கடவுளேத் துதிக்க அவ்விடத்தில் இடக் கண் தெரியப் பெற்றனர். திருவாரூரில் வந்து வலது கண்ணும் தெரியப் பெற்றனர்.

Koviloor Digital Library

10\. இவர் பரமசிவனைத் தூதனுப்பியது தகாத காரியமென்று திருப்பெருமங்கலத்திலிருந்து ஏயர்கோன் கலிக்காம நாயனர் இவர்மேல் கோபங்கொண்டு இருத்தலை அறிந்த பரமசிவன் கலிக்காம நாயனருக்குச் சூலை நோய் உண்டாக்கி அது சுந்தரராலன்றித் தீராது என்று அவருக்குச் சொல்ல, அவர் சுந்தரரால் அந்நோயை நிவர்த்தித்துக்கொள்ள உடன்படாதிருந்தும், பரமசிவன் சுந்தரரை அவரிடம் அனுப்ப, சுந்தரர் வருவதை அறிந்து கலிக்காம நாயனர் உடைவாளினுல் தன் வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறந்துகிடக்க, அதைப் பார்த்து, சுந்தரரும் தன் வயிற்றைக் கிழித்துக் கொள்ள எத்தனிக்கையில், பரமசிவன் கலிக்காம நாயனரை உயிர்ப்பித்தனர். உடனே இருவரும் ஒருவரையொருவர் வணங்கி மகிழ்ந்தனர்.

11\. திருநாரைக்காரோணத்தில் இவர் பரமசிவன்மேல் பதிகம்பாடி பொன்னும், நவரத்தினமும், ஆபரணங்களும், வஸ்திரங்களும், குதிரைகளும், உடைவாளும் பெற்றனர்.

கோவிலூர் ஆதீனம் 630 307

12\. சேரமான் பெருமாள் நாயனரால் இவருக்குக் கொடுக்கப்பெற்ற திரவியத்தை வரும் வழியில் சிவபூதகணங்களாகிய கள்ளர்கள் பறித்துக்கொள்ளவே திருமுருகன் பூண்டியில் சுவாமிமேல் பதிகம் பாடி அத்திரவியத்தை மீண்டும் பெற்றனர்.

Koviloor Digital Library

வண்டமிழ்ப் பாடல்களால் மாணிக்கவாசக சுவாமிகள் செய்த அற்புதச் செயல்கள்.

பெருகும் வையை தனை அழைப்பிக்குமே
பிரம்படிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரியெ லாம்பரி யாக நடத்துமே
நாடி மூகை தனைப்பேசு விக்குமே
பரிவிற் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே
பரமன் ஏடெழு தக்கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
வாதவூரர் வண்டமிழ்ப் பாடலே.

மாணிக்கவாசகரது தீந்தமிழ்ப் பாடல்கள், சிவபெருமானைத் திருவருள் சுரக்கச் செய்து, நரிகளைக் குதிரைகளாகவும் அவரையே அக்குதிரைகளுக்குத் தலைவராகவும் வருமாறு செய்தன: அன்று இரவே அக்குதிரைகள் எல்லாம் திரும்பவும் நரிகள் ஆகி விட மன்னன் மாணிக்கவாசகரை ஆற்றின் சுடு மணலில் நிறுத்தித் துண்புறுத்தியதற்கு இரங்கி, வைகை ஆற்று வெள்ளப் பெருக்கெடுக்கச் செய்தனர். பக்தியில் சிறந்த வந்தி என்னும் பிட்டு வாணிச்சிக்காகச் சிவபிரானைக் கூலியாளாக வந்து மண்சுமக்கச் செய்தன; மன்னன், கூலியாளாக வந்த இறைவனது முதுகில் அடித்த அடி மக்கள் அனைவர் முதுகிலும் படும்படி செய்தன; இவையே யன்றிக் கீழே கண்ட செயற்கரிய செயல்களையும் செய்திருக்கின்றன.

1. ஈழநாட்டு மன்னனொருவனின் ஊமை மகளைப் பேசும்படி செய்ததுமின்றி, அவனைக்கொண்டே சைவசமயத்தில் பிறருக்குள்ள சந்தேகங்களைத் தான் கேட்க அவற்றிற்குப் பதிலுரைக்கும்படி செய்தருளினர்.

Koviloor Digital Library

2. சைவசமயத்தை இகழ்ந்து பேசிய ஈழநாட்டுப் புத்த சமயத்தவரை ஊமைகளாகும்படி செய்தார்.

3. தில்லைத் திருப்பதியில் கனகசபையின் முன்னே "திருவாசகத்திற்குப் பொருள் சிற்றம்பலவனே" என்று சுட்டிக்காட்டிப் பூதவுடலை ஒடுக்கிச் சிவமானர்.

செந்தமிழால் சைவ சமய ஆச்சாரியர்கள் செய்தருளிய அற்புதங்களுக்கும், இயேசுநாதர் செய்தருளிய அற்புதங்களுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகள்.

கிறிஸ்தவ அன்பர்கள் தமிழில் வெளிப்படுத்தும் துண்டுப் பிரசுரங்களில் "இரட்சிப்படைய (தேவ கோபத்தில் தப்ப) வழியுண்டா? உண்டு. கர்த்தரா கிய ஏசுகிறிஸ்துவை விசுவாசி!! அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் ரக்ஷிக்கப்படுவீர்கள்(அப்:15; 31) பாவிகளை ரக்ஷிக்க கிறிஸ்து ஏசு உலகத்தில் வந்தார் (1திமோத்.1:15) அவராலேயன்றிவேறெருவராலும் ரக்ஷிப்பில்லை. நாம் (மனுஷர்) ரக்ஷிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழ் எங்கும் மனுஷர்களுக் குள்ளே அவருடைய (இயேசுவின்) நாமமேயல்லா மல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை, (அப்.4:12). அவரை விசுவாசிக்கிறவன் மரித்தா லும் பிழைப்பான், (யோவான் 11:25).

தேவனுடைய பக்ஷபாதமற்ற அன்பு; பாவ மற்ற ஜீவியம், அற்புதங்கள், சர்வ வல்லமை இவை களை யாரிடத்தில் காணலாம்? நாம் கருத்தாய்க்

Koviloor Digital Library

கவனித்தால் ஏசுவினிடம் மாத்திரமே இவைகளைக் காணமுடியும். அவர் நம் பாவங்களுக்காகக் கொல்லப்பட்டு, தன் வல்லமையினுல் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்து இன்னும் உயிரோடு இருக்கிருர். ஆகவே ஏசுவாலே மாத்திரம்தான் மனுஷன் பாவத்திலிருந்து விடுபடக்கூடும்''. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நன்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராய் இருக்கிருர், (1.யோ.1.7-9) நானே வழியும் சத்தியும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னுலேயல்லாமல் ஒருவரும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6) என்றெல்லாம் வெளியிட்டு இந்துக்களைக் கிறித்தவர்களாக்க முயற்சித்து வருகிருர்கள்.

ஆதலால், செந்தமிழால் செய்தருளிய சைவ சமயாச்சாரிய சுவாமிகளது அற்புதங்களுக்கும், ஏசுநாதர் செய்தருளிய அற்புதங்களுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை இந்துக்கள் உணர்ந்து எச்சரிக்கையாக இருந்துகொள்ளுமாறு இதனடியில் விளக்கியிருக்கிருேம்.

1. சைவசமய ஆச்சாரிய சுவாமிகள் செய்த அற்புதங்களுக்கு, அவ்வவற்றைச் செய்த ஆச்சாரியரே பாடி அருளிய அகச் சான்றுகள் உள்ள பாடல்கள் இருக்கின்றன. இடைக்காலத்தில் யாரும் கற்பித்துச் சேர்த்த குறிப்புகள் எவையும் அவர்களது அற்புதங்களாக ஏற்றுக்கொள்ளப்பெற்றதில்லை. பின்னர் ஆராய்ந்து முடிவு செய்து அவற்றில் எதுவும் நீக்கப்பெற்றதுமில்லை. இயேசுகிறிஸ்துவின் அற்புதங்களைக்கூறும் சுவிசேஷங்கள் ஒன்றுக்கொன்று ஒவ்வாதனவாக 50 வரை இருந்தனவென்றும்,

Koviloor Digital Library

கி. பி. 325-ம் ஆண்டில் " நீஸ் " என்ற இடத்தில் " கான்ஸ்டன்டைன் " என்னும் சக்ரவர்த்தி பாதிரி மார்களின் பெரும் கூட்டம் ஒன்றைக் கூட்டி அதில் தவருனவை என்று கண்ட "ஜேம்ஸ்" முதலியவர் களது 46 சுவிசேஷங்களை நெருப்பில் இடும்படி செய்துவிட்டு, இப்பொழுதுள்ள மத்தேயு முதலிய நால்வரது சுவிசேஷங்களை அங்கீகரித்தார் என் றும் வரலாறு கூறுகிறது. ஆகவே இயேசுநாத ரின் அற்புதங்களுக்கு அவரே கொடுத்த அகச் சான்று ஒன்றுமில்லை என்பதும், அவரைப்பற்றி ஒன்றுக்கொன்று ஒவ்வாத கதைகளைப் பலர் எழுதி வைத்திருந்தார்கள் என்பதும், அவற்றிலிருந்து இப்பொழுது வழங்கி வரும் கதை தேர்ந்தெடுக்கப் பட்டதென்பதும் தெரிந்துகொள்ளலாம்.

2. சமயாச்சாரியார் செய்த அற்புதங்கள் அனைத்தும், ஊர், பெயர், காலம் முதலிய எல்லா விவரங்களும், அறியத்தக்க நிலையில் இன்றும் காணத்தக்க, புறச்சான்றுகளாகிய அடையாளங்களை உடையன வாய் நிகழ்ந்தவை.

இயேசுநாதர் செய்த அற்புதங்கள் எந்த நாளிலும் எந்த விவரங்களும் அறியமுடியாத நிலையில் எந்தப் புறச்சான்றுகளும் இல்லாதனவாய்ச் சொல் லப்பெறுபவை.

3. நம் நாட்டில் பிசாசோட்டும் வேலையை மிகச் சாதாரணமான மனிதர்கள்கூடச் செய்துவரு கிருர்கள்.

ஒரு மனிதனிடத்திலிருந்து 2000 பிசாசுகளை இயேசுநாதர் நிரபராதிகளான 2000 பன்றிகளிடம் செலுத்தி அவைகளைக் கடலில் விழுந்து மாளும்படி செய்திருக்குருர்.

Koviloor Digital Library

4. திருஞானசம்பந்தர் அடியார்களோடு தங்கியிருந்த திருமடத்தின் புறத்தே, சமணர்கள் தீ வைத்த பொழுது, மடத்திற்குள் இருந்தபடியே அதற்குக் காரணமாயிருந்தவன் பாண்டிய மன்னன் என்பதை அவர் அறிந்தார்.

இயேசுநாதர் அவரது வஸ்திரத்தைத் தொட்ட பெரும்பாடுள்ள பெண்ணைத் தெரிந்துகொள்ள முடியாமல் விசாரணை செய்துதான் அறிந்தார்.

5. சமணர்கள் கல்லிற் கட்டிக் கடலில் போட திருநாவுக்கரசு சுவாமிகள் அக் கல்லைத் தெப்பமாகக் கொண்டு கரையேறிய இடம் இன்றும் தென்னுற் காடு ஜில்லாவில் கடலூருக்கருகில் "கரையேற விட்ட குப்பம்" என்ற பெயருடன் வழங்கப்பெறுகிறது இயேசுநாதர் அதட்டிக் கையமர்த்திக் கொந்தளிப்பை அடக்கிய கடல் எங்கே இருக்கிறது என்று இதுவரை யாரும் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை.

6. நீற்றறையிலும், நஞ்சு கலந்த பாற்சோற்றிலும், யானையின் முன்னும், கடலிலும் சாவிலிருந்து இறையருளால் திருநாவுக்கரசர் காப்பாற்றப் பெற்றுர்.

இயேசுநாதர் தன்னைக் கொல்லவந்த யூதர்களிடமிருந்து தான் தப்பவோ மரணத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளுதற்குரிய இறையருளைப் பெறவோ முடியவில்லை.

7. திருஞானசம்பந்தர் இறந்துபோன பூம்பாவையைச் சில வருஷங்கள் கழித்து அவளைச் சுட்டெரித்த சாம்பலையும், எலும்பையும் கொண்டு, அவை யிருந்த குடத்திலிருந்து வெளிவருமாறு செய்

Koviloor Digital Library

தருளினுர். சுந்தரமூர்த்தி நாயனுர் முதலை உண்டு மாய்ந்து போன சிறுவனைச் சில ஆண்டுகள் கழித்து உயிர்ப்பித்து அந்த முதலையின் வாயி லிருந்தே வரும்படியாக அருளினுர்.

இயேசுநாதரோ இறந்துபோன தருவாயில் இறந்த வரது சடலங்கள் இருந்த பொழுதுதான் அவர்களை உயிர்ப்பித்தாரே தவிர அச்சடலங்கள் அழிந்தபின் உயிர்ப்பிக்கவில்லை.

8. சமயாசாரியர் படிக்காசுகளைப் பெற்றுப் பஞ்சக் காலம் முழுவதும் பல்லாயிரவரது பசியை நீக்கி யருளினுர்.

இயேசுநாதர் பெறுமதியில்லாத 12 அப்பங்களை யும் சில மீன்களையும் கொண்டு இரண்டே நாட்கள் மொத்தம் ஒன்பதாயிரம் மக்களுடைய பசியைத் தீர்த்தார்.

9. சமயாசாரியர் இவ்வுலகத்தைவிட்டுக் செல்லத் தாங்களாகவே இறைவனை வேண்டி அப்பேற்றைப் பெற்றனர்.

இயேசுநாதரோ, எதிர்பாராத வகையில் சிலுவை யில் அறையப் பெற்று அதிலிருந்து தப்புதற்கு இறைவனை வேண்டியும், காப்பாற்றப் பெருமல் உயிர் துறந்தார். அவர் மூன்றும் நாள் உயிர்த் தெழுந்தார் என்பது ஸ்தூல உடலோடு அல்ல. கொல்லப்பட்ட எவரும் ஆவிஉடம்போடு பேயாய்த் திரிவதுபோல அவரும் ஆவிஉடலோடு இருந்து சிலருக்கு மட்டும்தான் உயிரோடு இருந்ததை நிரு பித்தெழுந்திருக்கிறுர். ஸ்தூல உடம்பில் உயிர்த் தெழுந்திருந்தால் அப்பொழுது நிருபணம் தேவை யில்லை அல்லவா?

Koviloor Digital Library

இதன் விவரங்களையும், மேற்கோள்களையும், நிரூபணங்களையும், மதுரை ஆதீனம், 291-வது குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வெளியிட்டிருக்கிற சிறந்த ஆராய்ச்சி நூலாகிய **"இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்"** என்ற நூலில் கண்டுகொள்ளலாம்.

10. செயற்கரிய செயல்கள் செய்த சைவசமய ஆசாரியர்கள் உலகியலுக்கு மாறுபடாத நிலையில் எல்லோரையும்போல் உத்தமத் தாய் தாந்தையார்க்கு அருட்குழந்தைகளாக அவதரித்திருந்தார்கள்.

இயேசுநாதர் ஒருவர் தான் மற்ற மனிதர்களைப் போல் பிறவாமல் பரிசுத்த ஆவியினுல் பிறந்தார் என்று சொல்லுவதும் உண்மையல்ல; பரிசுத்த ஆவியினுல் நிரப்பப் பெற்ற நிலையில் கன்னிமரியாள், இன்னெருு உன்னதமானவருடைய பலம் அவள்மேல் நிழலிட அவள் கர்ப்பமான உண்மை, லூக்கா எழுதின சுவிசேஷத்தைக் கருத்தூன்றிப் படித்துப் பார்த்தால் தெளிவாகும்.

11. சைவசமய ஆசாரியர்களும் ஆழ்வாராதிகளுமே தேவ தேவனுகிய சிவபெருமானையும், மகா விஷ்ணுவையும் நேரே கண்டு, பரவசப்பட்டுப் பல்லாயிரக் கணக்கான அருட்பாடல்களில் அக்கடவுளரின் திருவுருவங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிருர்கள். அவற்றுள் சில பாடல்களில் சிவபெருமான் திருநீறு அணிந்திருப்பது முதலியன கூறப் பெற்றிருக்கிறது. இறந்தவர்களில் சில புண்ணிய சீலர்கள் அது உண்மைதான் என்று உறுதிபடுத்துகிருர்கள். இயேசுநாதர் பரமண்டலத்திலிருக்கிற பிதாவே எல்லோருக்கும் உண்மையான பிதா என்று கூறியிருக்கிருரே தவிர, அவரைத்தான் கண்டதாகவோ

Koviloor Digital Library

அவர் எப்படிப்பட்ட உருவத்தில் என்னென்ன அணிந் திருக்கிருர் என்று சொன்னதாகவோ சுவிசேஷங்களில் இல்லை. ஆனுல் மாற்கு சுவிசேஷத்தில் இயேசுநாதர் மரித்த பிறகு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட் டுத் தேவனுடைய வலது கரத்தில் உட்கார்ந்தார் என்று சொல்லப்பெற்றிருக்கிறது.

அன்றியும் இயேசுநாதர் தோன்றுவதற்கு 5000 ஆண்டுகளுக்குமுன் தோன்றிய கிறிஸ்துவ வேதப் புத் தகத்தின் பழைய ஏற்பாடு ஆதி ஆகமம் முதலாம் அதிகாரம் 26, 27-வது பத்தியில் "தேவன் தமது சாய லாகவும், தமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண் டாக்குவோமாக என்ருர்" என்றும் தேவன் தன்னுடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்" என்றும் கூறியிருப்பதிலிருந்து பரமண் டலத்திருக்கிற தேவபிதா மனிதரைப் போன்ற சாயலி லும் ரூபத்தின்படியேயும் இருக்கிருர் என்பது தெளி வாகும்.

மேலும் பரமண்டலத்திலுள்ள தேவாதி தேவனுகிய கடவுள் பல அடியார்களுக்குத் தெரிசனம் கொடுத்து அவர்களோடு பல உண்மைகளைப் பேசியும், போதித்தும் வந்திருக்கிருர் என்பதை கிறிஸ்தவ வேதப் புத்தகத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள ஆதியாகமமுதல் மல்கியா ஆகமம் முடிய உள்ள 39 ஆகமங்களும் வலியுறுத்து கின்றன. அவற்றில் ஆங்கிலத்தில் (God) கடவுள் என்று வருகின்ற பதங்களையெல்லாம் கர்த்தர் என்று தமிழில் மொழி பெயர்த்திருக்கிருர்கள். கிறிஸ்தவ அன்பர்களுடைய 10 கற்பனைகளையும் அவ்வாறு மோசே என்ற பக்தருக்குக் கர்த்தர் போதித்ததாக யாத்திராக மம் அதிகாரம் 20 விளக்கமாகக் கூறுகின்றது.

Koviloor Digital Library

உண்மை இவ்வாறிருக்க, கிறிஸ்தவ அன்பர்கள் சொரூப வணக்கம் கடவுளால் விலக்கப்பட்டிருக்கிற தென்றும், விக்ரக ஆராதனை செய்வது கனத்த பாவ மாகுமென்றும், பிதற்றுகிறார்கள். அதற்கு மேற்கோ ளாக மேலே சொன்ன யாத்திராகமம் இருபதாம் அதிகா ரத்தில் 2 முதல் 5 வரையுள்ள வசனங்களைக் கூறுகிறார் கள். அதில் "உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவை களுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்ரகத்தையாகிலும், நீ உனக்கு உண்டாக்கவேண் டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" என்று கர்த்தராகிய கடவுள் கூறினதாக, இருக்கிறது. அந்த வசனத்திற்கு நேர் மாறாக பூமியில் ஒரு தாய் வயிற்றில் 10 மாதம் தங்கியிருந்த இயேசு நாதருடைய சொரூபத்தையும், அவரை ஈன்றெடுத்த கன்னி மரியாளின் சொரூபத்தையும், அவர் அறையப் பட்ட சிலுவையும், வைத்து கிறிஸ்தவர்கள் சொரூப வணக்கம் செய்து வருகிறார்கள்.

ஆனால் இந்துக்களோ அவ்வாறு கற்பித்த தேவாதி தேவனாகிய ஆண்டவன் ஒருவனேயானாலும் அவன் என்னென்ன கோலத்தில் எவ்வெப்பொழுது அருளாளர்களுக்குக் கருணையினால் காட்சி கொடுத்து அருள் புரிந்தானோ அதே வடிவங்களில் விக்கிரகங்களை அமைத்து அதில் அந்தந்த மூர்த்தங்களை எழுந்தரு ளும்படிப் பிரார்த்தித்து, அதற்கு ஆகவேண்டிய வேதா கமச் சடங்குகளைச் செய்த பின்னரே இந்துக்கள் ஆரா தனை செய்து வருகின்றனர்.

அவ்வாறு ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப் பெற்ற, மூர்த்திகளின் அருமை பெருமைகளை உணராமல்

Koviloor Digital Library

ஏளனம் செய்கிறவர்களும், அவமரியாதை செய்கிறவர்களுமே, தரித்திரர்களாகவும், அங்க ஈனர்களாகவும், ஊமைகளாகவும், குருடர்களாகவும் மறு ஜென்மத்தில் பிறக்கவேண்டியவர்களாகின்றார்கள் என்பது வேதாகமத் துணிபு. ஒரு வியாதியைக் குறித்து ஏதாவது ஒரு மூர்த்திக்கு ஒன்று நேர்ந்து கொண்டால் அவ்வியாதி நீங்கிவிடும். என்னபாடுபட்டும், நேர்ந்துகொண்டவன் அந்தக் கடனைச் செலுத்திவிடுவதும் எல்லோருக்கும் அனுபவமானதேயாகும். அப்படிச் செலுத்தாவிட்டால் குடும்பங்களில் பலவித அல்லல்கள் விளைவதும் யாவரும் அறிந்ததேயாகும். "அரசன் அன்று கேட்பான். தெய்வம் நின்று கேட்கும்" என்பது பழமொழியாக இருந்தாலும் பலரும் அறியக் கொலை செய்த ஒருவன் தூக்குத் தண்டனை அடையுமட்டும் மற்றவர்கள் போலவே வாழ்கின்றான் என்பதை அறிவோம். அப்போதைக்கப்போது நியாயம் செலுத்தவேண்டிய அரசனும், ஒரு சட்டப்படி குற்றவாளிக்குக் கொடுக்கவேண்டிய அறிவிப்பு, அவகாசம், நியாய விசாரிப்பு, முதலிய நியதிக்கும், நிர்ணயத்திற்கும் உட்பட்டு நடக்கவேண்டியதிருக்கிறது. அதுபோலவே தெய்வமும், காலம், நியதி என்னும் சட்டதிட்டங்களை அமைத்தே, அதன்படி வினைப்பயன்களை அனுபவிக்கச் செய்கின்றது.

ஒரு சிறைச்சாலைக்குள் கல்லை உடைத்துக்கொண்டிருக்கும் கைதிகளில் ஒரு மூர்க்கன், "இந்த அரசாங்கம் ஒழிக; மந்திரி ஒழிக" என்று என்னதான் ஏசினாலும் அதற்காக நமது அரசாங்கமும்; மந்திரிமாரும் ஏதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல், அந்தக் கைதி வெளியே வந்தபின் நடக்கிற நடப்பைப் பொறுத்தே, திரும்பவும் முன்னைவிடக் கடுமையான தண்டனை கொடுக்கிறார்கள் என்பதை யாரும் அறிவர். அதுபோலவே இப்பூலோக சிறைச்சாலையிலுள்ளவர்கள், தெய்வ நிந்தனை செய்தாலும், விக்கிரகங்களையும்

Koviloor Digital Library

விக்ரக ஆராதனையையும் பழித்துப் பேசினாலும், அத் தெய்வம் உடனே இப்போலோகத்திற்கு வந்து நாக் கைத் துண்டித்துவிடாது. இப்பூலோக வாழ்க்கை முடிந்தபின், மறுதண்டனை கொடுக்கும்பொழுதுதான் அதற்குரிய பலனும் சேர்த்துக் கொடுக்கும். ஆனதி னாலேயே தெய்வ நிந்தனை நம்மை உடனே ஒன்றும் செய்யவில்லையே என்று எண்ணி, தெய்வ நிந்தனை செய்வதும், விக்ரக ஆராதனையின் மேன்மையையும் உண்மைத் தத்துவங்களையும் ஒரு சிறிதும் விளங்கிக் கொள்ளாதவர்கள் அதனைப் பழிப்பதும், எள்ளி நகை யாடுவதும் அறிவுடைமையாகாததுமட்டுமல்லாமல், அது தெய்வ அபராதத்திற்கும், அதற்குரிய தண்டனைக் கும் நம்மை ஆட்படுத்துகின்ற கொடியதோர் பாவச் செயலாகும் என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

இவ்வுலகில் பக்தியுள்ளவர்களும், ஒழுக்கமுள்ளவர் களும் தியாகவுள்ளம் உள்ளவர்களும் விண்ணுலகம் சென்று அங்கிருந்து இவ்வுலகை ஆண்டுவரும் நமது அம்மையப்பனாகிய ஆண்டவனை நேரில் காணலாம் என்பது உண்மையே. அவ்வாறு சிவலோகத்திலிருக் கிற நமது அப்பனது முக்கிய அடையாளம் நெற்றிக் கண்ணும் நீலகண்டமும் திருநீறும் என்று கண்ட பெரி யோர்கள், நன்றி விசுவாசத்துடன் நெற்றிக்கண்ணை நினைவுகொள்ள, சந்தனம் குங்குமம் அல்லது குங்கும மும் சந்தனமும் கொண்ட திலகமும், நீலகண்டத்தை நினைவுகொள்ள நெற்றியிலும் அங்கங்களிலும் திரு நீறும் தரித்து அவைகளைத் தங்களது சமயச் சின்னங் களாகக் கொண்டார்கள். அதனாலேயே,

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூச மகிழ்வாரே யாமாகில்
தங்காவினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே.

திருமந்திரம் – 1666.

Koviloor Digital Library

என்று திருமூலரும், திருஞானசம்பந்தப் பெருமானுர் "வானவர் மேவது நீறு" என்றும் "மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு" என்றும் "பராவ ணம் ஆவது நீறு பாவம் அறுப்பது நீறு" என்றும் அருளியிருக்கிருர்கள். வெகுநாட்களாக ஒரு கட்சியைச் சேர்ந்தவனுக்கு ஒரு தனி மதிப்பு உண்டு என்பதுபோல், நமது அம்மையப்பனது சின்னங்களை வெகுநாட்களாக அணிந்து வந்தால், அந்த ஒன்றினுலேயே திருவடிப் பேறு கிடைக்கும் என்பது திருமூலர் கருத்தாகும். திருநீறு கிடாரியின் சாணியிலிருந்து தயாரிக்கப்பெற வேண்டுமென்றும், அது திட்டுக் கழிக்கும் சக்தியுடைய தென்றும், அது பாவத்தைப் பரிகரிக்கும் என்றும், சுத்தத் தண்ணீரில் அதைப்போட்டு, தருப்பைப் புல்லைக் கொண்டு, பாளையத்தால் வெண்டுண்டவனையோ செத்த வனையோ, பிரேதக் குழியையோ, மனித எலும்பையோ, தொட்டதனுல் ஏற்பட்ட தீட்டைக் கழிப்பதற்காக மூன் ரும் நாளிலும், ஏழாம் நாளிலும், தெளிக்கவேண்டு மென்றும் கிறிஸ்தவ வேதப் புத்தகத்தில் பழைய ஏற் பாட்டில் எண்ணுகமம் 19 விரிவாகக் கூறுகின்றது. மேலும் யோனு முன்ருவது அதிகாரத்தில் தேவனுடைய மன்னிப்பைப் பெறவேண்டுமென்ருல், ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசமிருந்து, உடுப்பைக் கழற்றிப் போட்டுவிட்டு இரட்டை (ஆசாரமான ஒரு உடையை) உடுத்திக்கொண்டு சாம்பலிலே உட்கார்ந்து தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிட வேண்டு மென்று கூறுகிறது. இவற்றிலிருந்து பல்லாயிர வரு ஷங்களுக்குமுன் திருநீற்றின் பெருமையையும், அவசி யத்தையும், இந்தியாவிற்கும், இலங்கைக்கும் வெளியே உள்ள நாடுகளில் மக்கள் உணர்ந்து உபயோகப்படுத்தி வந்திருக்கிருர்கள் என்பது புலனுகிறதல்லவா?

உலகத்திலுள்ள பொருள்கள் பலவற்றிலும் சாணி ஒன்றே பிற நாற்றங்களைப் போக்கி, தொத்து நோய்க்

Koviloor Digital Library

கிருமிகளைக் கொன்று, தான் நாருதிருக்கும் அரிய சக்தி வாய்ந்தது. ஏனைய கிருமி நாசினிகளெல்லாம் விஷக் கிருமிகளைக் கொன்று, பிற நாற்றத்தைத் தன்னுடைய நாற்றத்தால் தெரியவிடாமல் செய்யுமே தவிர, உண்மையில் சாணியைப்போல் பிற நாற்றங்களைப் போக்கி, தானும் நாருமலிருப்பதில்லை. விஷக்கிருமிகளைக் கொல்லும் ஆற்றல் சாணிக்கு இருக்கிறதா என்று யாரும் சந்தேகப்படவேண்டியதில்லை. அவரைச் செடியில் பூச்சி விழுந்துவிட்டால் எருக்கட்டிச் சாம்பலைத் தூவுவார்கள். அதனுல் பூச்சிகள் மாய்ந்து, செடியும் நன்ருக வளரும். சாணியின் பஸ்பமாகிய சாம்பலுக்கு, பெரிய புழுக்களையும் கொல்லக்கூடிய ஆற்றல் இருக்குமாகுல், சாணிக்கு விஷக்கிருமிகளைக் கொல்லும் ஆற்றலுண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாதல்லவா ? ஆகவே விபூதி எல்லா விதத் தீட்டுக்களையும் போக்கி, அதை அணிகின்றவரது உடல் நாற்றத்தையும் போக்கித் தூய்மைப்படுத்துகிறது என்பதை சைவசமயிகள் உணர்ந்தே, சுகாதார முறையிலும், ஆண்டவனது சின்னம் என்ற முறையிலும் நாமெல்லாம் முடிவில் ஒரு பிடி சாம்பலாவோம் என்ற நினைப்பை உணர்த்தக்கூடிய அடையாளம் என்ற முறையிலும் அணிந்து வருகிருர்கள். இந்த உண்மையை அறியாதவர்கள் ஏதேதோ பிதற்றுவது எவ்வளவு பேதமை என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். " விக்ரக ஆராதனையின் விளக்கம் " என்ற தலைப்பில், மதுரை ஆதினகர்த்தர் அவர்கள் வெளியிட்டிருக்கும் நூலில் இதன் விரிவைக் கண்டுகொள்ளவும்.

அவ்வாறுள்ள விக்ரகங்களின் ஆராதனையும், விபூதி அணிவதையும் மேற்கொண்டு ஒழுகிவந்த சைவ சமயாசாரியர் தமிழால் பாடிச் செய்த செயற்கரிய செயல்களை உலகத்தில் வேறு யாரும் செய்யாததிலிருந்து இந்து சமயத்தின் மாண்பு இன்னதென்பது யாவருக்கும் தெளிவாகும்.

Koviloor Digital Library

இத்தகைய செயற்கரிய செயல்கள் – அற்புதங்கள் நடந்திருக்க முடியுமா? இவையெல்லாம் புராணப் புளுகல்லவா? என்று அனுபவமில்லாதவர்கள் கேட்கிறுர்கள். அவர்களுக்கெல்லாம் இன்றும் சிறு சித்துக்கள் உள்ளவர்கள்கூட நாம் கேட்கின்ற தின்பண்டங்களையும், வழிபாட்டிற்கு வேண்டிய வேலாயுதம் சிறிய விக்ரகங்கள் சங்கு மாலைகள் முதலியவற்றையும் வருத்திக் கொடுக்கிறவர்கள் இருக்கிறுர்கள் என்பது தெரியாதிருக்கவேண்டும். அரியலூருக்குச் சமீபத்திலுள்ள மருதூரில் ஒரு அம்மையார், தேங்காய் பழத்தை மற்ருெருவர் தலையில் ஒரு தாம்பாளத்தில் வைத்து அவற்றை அப்படியே பழநியப்பரை எடுத்துக்கொள்ளச் சொல்லுவதையும், தட்டு தலையிலிருந்து காணுமல் போவதையும் கொஞ்சநேரம் சென்றபின் முற்றத்தில் அதே தாம்பாளம் உடைத்த தேங்காய் பழத்துடனும், பழநி பஞ்சாமிர்தத்துடனும் விபூதிப் பிரசாதத்துடனும், வெட்ட வெளியிலிருந்து அந்த அம்மையார் கைக்கு இன்றும் வந்து கொண்டிருப்பதையும் அறியாதிருக்கவேண்டும். சிறு சித்துக்களுடையவர்களே இவ்வாறெல்லாம் செய்யக் கூடுமானுல் திருவருள் கைவரப் பெற்ற அடியார்கள் எதைத்தான் செய்யமுடியாது என்பதைச் சிந்தித்தல் வேண்டும்.

இவ்வளவு செயற்கரிய அற்புதங்களைச் செந்தமிழ்ப் பாடல்கள் பாடி நிகழ்த்திய சைவசமய ஆசாரியர்களையே தெய்வமாகக் கொண்டாடாமல் சமயகுரவர்களென வழிபட்டு வருகின்ற எந்த இந்துதான், இயேசுநாதர் ஒருவரே கடவுளின் அவதாரம்; அவராலன்றி வேறு யாராலும் பாவ மன்னிப்பும், மோக்ஷ சாம்ராஜ்யமும் கொடுக்க

Koviloor Digital Library

முடியாது என்று தமுக்கடிக்கிறதை ஏற்றுக் கொள்ளக் கூடும்? இதனுல் பெண்ணுக்கோ, பொன்னுக்கோ, படிப்பிற்கோ, உத்தியோகத்திற்கோ அல்லது வைத்தியர் முதலிய பிற வசதிகளுக்கோ ஆசைப்படும் ஒன்றும் தெரியாத பாமரர்களை ஏமாற்ற முடியுமே தவிர, இந்து மதத்தின் மாண்பைச் சிறிதளவாவது உணர்ந்த எவரையும் கிறிஸ்துவராக மாற்ற எவராலும் முடியாது என்பது தெளிவாகும்.

ஆகவே இந்து சமயத்தைச் சார்ந்த சகலரும் இனியாவது கிறிஸ்தவர்கள் செய்கிற பிரசாரத்தில் மதி மயங்கி ஏமாந்து விடாமல் எச்சரிக்கையாகவும், எக்களிப்புடனும் இருந்து கொள்வார்களாக.

KOVILOOR MADALAYAM
KOVILOOR 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: 21-4268)

Koviloor Digital Library 5459 R65

(மூன் அட்டை உட்பக்கத் தொடர்ச்சி)

கூட்டுவழிபாட்டுச் சேவைதான் மன்றத்தின் உயிர் நாடி. வாரத்தில் ஒரு நாள் ஒரு கோவிலில் அல்லது ஒரு பொது இடத்தில் எல்லோரும் கூடியிருந்து அரை மணி நேரம் திருவருள் நாட்டத்துடன், தூய உள்ளத்தோடு அருட்பாடல்களைப் பண்ணுடன் முதலில் ஒருவர் பாட மற்றவர்கள் தொடர்ந்து பாட வேண்டும்.

அடுத்து, பயிற்சியுள்ள பாடகர்களைக் கொண்டு பக்திப் பாடல்களைப் பாடுமாறு செய்யவேண்டும். தொடர்ந்து நல்லறிஞர்களைக் கொண்டு திருவருள் தவநெறிச் சார்புடைய பொருள்களைப்பற்றிச் சொற் பொழிவு நிகழ்த்தல் வேண்டும் கூட்டுவழிபாடு, குறித்த நேரத்தில் தொடங்கி, குறித்தநேரத்தில் முடியவேண் டும். வழிபாடு 1-மணி நேரத்திற்குக் குறையாமலும் 2-மணி நேரத்திற்கு மிகாமலும் இருத்தல் நன்று.

இன்றையச் சூழ்நிலையில் "கூட்டு வழிபாடு" சிறந்த தோர் இயக்கமாகும். தமிழ்நாட்டில், இம்மன்றச் சார்பில் பல இடங்களில் கூட்டு வழிபாடு சிறப்புடன் நடை பெற்று வருகிறது.

"கூட்டுவழிபாடு" நாடெங்கும் பெருகிவளர ஆண் டவன் திருவருளால் மழை நன்கு பொழியும். தானிய விளைகள் மலிந்து, நாட்டில் செழிப்புறும். அரசாங் கம் சிறந்தோங்கும் மன்னுயிரெல்லாம் குறைவின்றி வாழும். மக்களிடையே பக்தியும், பண்பாடும் வளரும் சைவ சமயத்தின் மேன்மையும், நீதியும் உலகெங்கும் பரவும்.

எனவே தங்கள் ஊரிலும் மன்றம் அமைத்துப் பணி செய்ய முன்வருமாறு வேண்டிக்கொள்கிறோம்.

" திருவருள் தவநெறி மன்றத்தார் "

மதுரை.

Koviloor Digital Library

சி. வி. என். பிரஸ், மதுரை:-69. தொலைபேசி: 7152.